**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 55/2023**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அக்பர் அலி | த/பெ.: | முகம்மது இப்பராஹிம் |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | விவசாயம் |
| வயது: | 52 | முகவரி: | பெரிய பள்ளிவாசல் தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 20.**01.2026.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

நான் வழக்கில் வாதி ஆவேன் . வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் கடந்த 16.12.2025 ம் தேதியன்று விசாரணை செய்யப்பட்டிருந்தேன். என் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியிருந்ததால் இடைக்கால மனு எண். 1/2026 தாக்கல் செய்து அந்த மனு இன்று அனுமதிக்கப்பட்டு, அதனடிப்படையில் பின்வரும் ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.08.1971 | ஆஸியா பீவியால் அமீனாபீவி பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 04.10.2002 | அமீனாபீவியால் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | | வாதியின் தாயார் பெயரில் உள்ள நகர நில அளவை பதிவேடு | நகல் |
| வா.சா.ஆ.4 | 15.11.2022 | 1 ம் பிரதிவாதியால் 2 ம் பிரதிவாததி பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் | சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.5 | 22.11.2022 | 2 ம் பிரதிவாதியால் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கை ஒப்பந்த ஆவணம் | சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.6 | 31.03.2022 | 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு | நகல் |
| வா.சா.ஆ.7 | 27.01.2023 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் | இணைய நகல் |

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.